5th March 1964]

கனம் திரு. சே. ம. அ. மஜீத் : இன்னும் முடிவு எடுக்கப்படவில்லை.

கூட்டுறவுச் சங்கங்கள், இராமநாதபுரம் மாவட்டம்.

*155 **கேள்வி.—திரு. கரு. சீமைச்சாமி :** கனம் உணவு அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) 1961-ல் இராமநாதபுரம் மாவட்டத்தில் எத்தனை கூட்டுறவுச் சங்கங்கள் இருந்தன ?

(இ) எத்தனை சங்கங்களின் கணக்குகள் தணிக்கை செய்யப்பட்டன ?

(உ) அவை ஆண்டுதோறும் தணிக்கை செய்யப்படுகிறதா ?

கனம் திரு. ந. நல்லசேனுபதி சர்க்கரை மன்ருடியார் :

(அ) 31—12—1961 வரை 1,658 சங்கங்கள் இருந்தன.

(இ) அண்மையில் கிடைத்த அறிக்கையின்படி, 1649 சங்கங்களின் கணக்குகள் கீழ்க்கண்டவாறு தணிக்கை செய்யப்பட்டன—

(1) கூட்டுறவு ஆண்டு (ஜூன் 1961 முடிய)	1385
(2) நிதி ஆண்டு (மார்ச்சு 1961 முடிய)	244
(3) காலண்டர் ஆண்டு (டிசம்பர் 1961 முடிய)	20
	1649

(உ) ஆம்.

திரு. செ. மாதவன் : தலைவர் அவர்களே, இந்தக் கூட்டுறவு சங்கங்களில் ஏதாவது தவறுதல்கள் நடந்தால், அந்தத் தவறுகளை சங்கத்திலுள்ள அங்கத்தினர்கள் எடுத்துச் சொன்னல் தான் விசாரிக்கப்படும் என்கின்ற நிலை இருக்கிறதா ? அல்லது அதிகாரிகளே சென்று பண ஊழல் ஏதாவது நடந்திருக்கிறதா என்று பார்ப்பதற்கு அதிகாரம் இருக்கிறதா ?

கனம் திரு. ந. நல்லசேனுபதி சர்க்கரை மன்ருடியார் : சங்கத்திலுள்ள அங்கத்தினர்கள் சொன்னலும் சொல்லாவிட்டாலும், அதிகாரிகள் விசாரிப்பதற்கு அதிகாரம் இருக்கிறது.

திரு. அ. ப. அழகமுத்து : பொதுவாக கூட்டுறவு சங்க அதிகாரிகள், மெஜாரிட்டி எந்தப் பக்கம் இருக்கிறதோ, அந்தப் பக்கத்திற்கு சாதகமாகத்தான் நடந்து வருகிருர்கள் என்பது கனம் அமைச்சர் அவர்களுக்குத் தெரியுமா ?

கனம் திரு. ந. நல்லசேனுபதி சர்க்கரை மன்ருடியார் : குற்றங்களைக் கண்டுபிடிப்பதில் மெஜாரிட்டி, மைனரிட்டி ஒன்றும் கிடையாது. இதற்கென்று தனியாக விதிகள் இருக்கின்றன. அதற்குத் தகுந்தபடி அதிகாரிகள் நடவடிக்கை எடுத்துக் கொள்வார்கள்.

[5th March 1964

திரு. செ. மாதவன் : தலைவர் அவர்களே, ராமநாதபுரம் மாவட்டத்தில் எத்தனை கூட்டுறவு சங்கங்கள் மீது ஊழல் குற்றம் இருக்கிறது ? இவைபற்றி விசாரிக்கப்பட்டிருக்கிறதா ?

கனம் திரு. ந. நல்லசேனபதி சர்க்கரை மன்றாடியார் : இப்போது 23 சங்கங்களில் தவறுதல்கள் நடந்திருப்பதாக, ஆடிட் செய்ததின் பிரகாரம் சொல்லப்பட்டிருக்கிறது.

திரு. செ. மாதவன் : தலைவர் அவர்களே, இந்தக் கூட்டுறவு சங்கங்களில் ஏதாவது பண ஊழல்கள் நடைபெற்றிருந்தால், இதற்குப் பொறுப்பானவர்கள் பணம் கட்டுவது வரையிலும் நடவடிக்கை எடுக்க வேண்டாம், அதன் பின்னால் நடவடிக்கை எடுத்தால் போதும் என்று ஏதாவது சர்க்கார் உத்தரவு பிறப்பித்திருக்கிறார்களா ?

கனம் திரு. ந. நல்லசேனபதி சர்க்கரை மன்றாடியார் : அவ்விதம் உத்தரவு ஒன்றும் பிறப்பிக்கப்படவில்லை.

Scheduled Caste members in Government service

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (a) & (b) The the Chief Minister be pleased to state—

(a) whether any proposal for reserving quotas for promotion in State Government services for employees belonging to the Scheduled Castes and Scheduled Tribes, was discussed at a meeting of the Southern Zonal Council during 1963;

(b) the details of the proposal ; and

(c) whether any final decision on the proposal has been communicated by the Central Government?

THE HON SRI M. BHAKTAVATSALAM : (a) & (b) The question was considered generally by the Southern Zonal Council but details were not discussed.

(c) Yes. It is under consideration.

திரு. வெ. கிருஷ்ணமூர்த்தி : ஸார், அரசாங்க ஊழியத்திலுள்ள ஷெட்யூல் வகுப்பினருக்கும் ஆதிவாசிகளுக்கும் வேலை உயர்வு கொடுப்பதற்காகக் கோட்டா ஏற்படுத்துவது இந்திய அரசியல் சட்டத்தின் 14-வது விதியின் பிரகாரம் விரோதமானது என்று உயர் நீதிமன்றம் தீர்ப்பு அளித்திருக்கிறதா ? அப்படியானால் அதைப்பற்றி அரசாங்கம் பரிசீலனை செய்ததா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : சுப்ரீம் கோர்ட், இதில் தவறுதல் ஒன்றும் இல்லை என்று தீர்ப்பு கொடுத்திருக்கிறார்கள். இதையொட்டி மத்திய அரசாங்கம் சில முடிவுகள் எடுத்திருக்கிறார்கள். அதைப்பற்றி தான் இந்த அரசாங்கமும் ஆலோசனை செய்தது.

திரு. செ. மாதவன் : ஷெட்யூல் வகுப்பு, ஆதிவாசிகள் என்று இதில் குறிப்பிடப்பட்டிருக்கிறதே, இத்துடன் பின்தங்கிய வகுப்பையும் சேர்ப்பதற்கு உத்தேசம் உண்டா ?